செய்தி வெளியீடு எண் : 53 dt : 25.04.17

# பத்திரிக்கை செய்தி

## ஸ்மார்ட் கார்டு பெற கூடுதல் தகவல்கள் அளிக்க வேண்டியவர்கள் பட்டியல் வெளியீடு

ஸ்மார்ட் அட்டைகளில் புகைப்படம் மற்றும் சரியான விவரங்கள் இல்லாதவர்களின் பட்டியல் நியாய விலைக்கடைகளில் வைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் உள்ளவர்கள் பெயர், தந்தை / கணவர் (அ) மனைவியின் பெயர், முகவரி மற்றும் தெளிவான புகைப்படம் ஆகியவைற்றை வழங்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கடந்த 1—ம் தேதி முதல் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டு வருகிறது. அச்சிடப்பட்ட ஸ்மார்ட் கார்டுகளுக்கு உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு ரகசிய குறியீட்டு எண் அட்டைதாரர்களின் அலைபேசி எண்ணுக்கு அனுப்பப்பட்ட ரகசிய குறியீட்டு எண் பெற்ற நாளிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் நியாய விலைக்கடைகளில் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

ரகசிய குறீயிட்டு எண் வரப்பெறாதவர்கள் புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டை வரப்பெற்றிருப்பின் சம்மந்தப்பட்ட கடை விற்பனையாளரிடம் உள்ள படிவத்தை பூர்த்தி செய்து குடும்ப தலைவர் (அ) உறுப்பினர்கள் கையொப்பம் போட்டு கொடுத்துவிட்டு புதிய ஸ்மார்ட் கார்டை பெற்றுக் கொள்ளலாம்.

சில குடும்ப அட்டைகளில் சரியான முகவரி இல்லாததாலும், குடும்ப உறுப்பினர்கள் — குடும்பத் தலைவருக்கான உறவு முறை தெரிவிக்காமல் இருப்பதாலும், புகைப்படம் இல்லாததாலும், புகைப்படம் தெளிவாக இல்லாத நிலையிலும் ஸ்மார்ட் கார்டு அச்சடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. புகைப்படம் மற்றும் சரியான விவரங்கள் இல்லாதவர்களின் பட்டியல் நியாய விலைக்கடைகளில் வைக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் உள்ளவர்கள் தங்களது புகைப்படத்தினை மட்டும் TNePDS என்ற மொபைல் அப்ளிகேஷனில் சென்று பதிவேற்றம் செய்து கொள்ளலாம் அல்லது நியாய விலைக்கடைக் கடை விற்பனையாளரிடம் புகைப்படம் மற்றும் விவரங்களை உடன் வழங்க வேண்டும், சரியான விவரங்கள் மற்றும் புகைப்படங்களை வழங்கினால் மட்டுமே ஸ்மார்ட் கார்டு அச்சிட்டு வழங்க இயலும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24/4/2017

மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம்.

24/4/17

வெளியீடு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
விழுப்புரம்